IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | OS. No. | | 9/2019 |
| | | P/W's | : | **PW1** |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | P.பொன்கமலக்கண்ணன் | CASTE | : | |
| S/O | பெருமாள் (லேட்) | RELIGION | : | **இந்து** |
| VILLAGE | வாடிப்பட்டி | CALLING | : | |
| TALUK | **வாடிப்பட்டி** | AGE | : | 53 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 05.11.2025**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. வழக்குச்சொத்தின் பழைய சர்வே எண் 1/8A. அதில் கட்டுப்பட்ட இடம் 8ஏர்ஸ். சர்வே எண் 1/8Aயில் மேற்குப்பக்கம் கடைசியில் உள்ள இடம்தான் தாவா சொத்து என்றால் சரிதான். மதுரை திண்டுக்கல் சாலையில் வடபுரம் முதல் அயிட்டச்சொத்தாக வழக்குச்சொத்து உள்ளது என்றால் சரிதான். வழக்குச்சொத்தில் பிரதிவாதி காய்கறி கடை நடத்தி வருகிறார் என்றால் சரிதான். குபேந்திரன் காய்கறி கடைக்கு வடபுரம் கோவிந்தன் காய்கறி கடை உள்ளது என்றால் சரிதான்.

2. மேற்படி குபேந்திரன், கோவிந்தன் ஆகிய இருவரையும் மேற்படி சொத்தில் நான்தான் வாடகைக்கு வைத்தேன். குபேந்திரன் அவர் கிரையம் பெறுவதற்குமுன் சுமார் 20 வருடங்கள் காய்கறி கடை வைத்திருந்தார். குபேந்திரன் என்மூலமாக வாடகைக்கு இல்லை என்றாலும், அவர் கிரையம் பெறும்வரையில் 1ம் பிரதிவாதிமூலமாக வாடகைக்கு இருந்தார் என்றாலும் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு C Schedule சொத்தாக ஒதுக்கப்பட்ட இடத்தில்தான் குபேந்திரன் காய்கறி கடை வைத்திருந்தார் என்றால் சரியல்ல.

3. வழக்குரையில் 5வது பத்தியில் எனது தகப்பனார் 1ம் பிரதிவாதியும் கூட்டுக்குடும்ப சொத்துக்களில் ஒருசில சொத்துக்களை கூட்டாக விற்பனை செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 1ம் வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் கூட்டாக உள்ள சொத்துக்கள் சம்பந்தமாக வா.சா.ஆ.16ஆக வருவாய்துறை ஆவணங்கள் தாக்கல்

செய்துள்ளேன். மேற்படி ஆவணத்தில் உள்ள சொத்து 16 பேருக்கு கூட்டாக பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தில் உள்ள நபர்களை வழக்கில் சேர்க்காததால் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

4. வழக்குச்சொத்தின் வடபுரம் 50 சதுரடி ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் அதற்காக அசல் வழக்கு எண் 30/19 ஆனது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. குபேந்திரன் கட்டிட அனுமதிப்பெற்றதை பேரூராட்சி சார்பில் ரத்து செய்ததாக ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்குச்சொத்தில் குபேந்திரனின் அனுபவத்தை இடைஞ்சல் செய்யக்கூடாது என்று அசல் வழக்கு எண் 132/2021 தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

5. வா.சா.ஆ.4 ஆவணத்தில் அதன் வழக்கு தரப்பினர்கள் வழக்குச்சொத்துக்களை 3 பாகமாக பிரிக்க ஒப்புக்கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தில் உள்ளதை வழக்கிற்காக மறுத்துச்சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தில் 19ம் அயிட்டமாக உள்ள 4 காய்கறி கடைகளை ABC என்று மூன்றாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி ஆவணம்படி வழக்குச்சொத்து 3 பாகமாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

6. வா.சா.ஆ.7 ஆவணத்தின் முழுமையான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.7 ஆவணத்தின் பிரதிவாதி தரப்பில் பெறப்பட்ட சான்றிட்ட நகலில் 15வது பக்கத்திலுள்ள தாவா சொத்து பிரிக்கப்பட்டதற்கான வரைபடம் நான் தாக்கல் செய்த ஆவணத்தில் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை பிரிக்கப்பட்ட விவரம் நீதிமன்றத்திற்கு தெரியக்கூடாது என்பதற்காக வா.சா.ஆ.7 ஆவணத்திலுள்ள பக்கங்களை எடுத்துவிட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

7. வா.சா.ஆ.5, 6 கிரையப்பத்திரத்தில் உள்ள சொத்துக்கள் 1ம் வாதியும் 1ம் பிரதிவாதியும் கூட்டான சொத்து என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல.

மேற்படி பத்திரங்களில் 1ம் வாதியும் 1ம் பிரதிவாதியும் அவரவருக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்துக்களை கூட்டாக விற்பனை செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

8. வழக்குச்சொத்தில் கட்டிட அனுமதியை ரத்து செய்யக்கேட்ட மனுதான் வா.சா.ஆ.11 என்றாலும் அதன்படி ஏற்பட்ட உத்தரவை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.14 ஆவணம் கட்டிட அனுமதியை ரத்து செய்த உத்தரவு கிடையாது என்றால் சரியல்ல. என் பூர்வீக சொத்துக்கள் 3 முறை பாகப்பிரிவினை செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 1976 பாகப்பிரிவினை பத்திரத்தில் D Schedule ஒதுக்கப்பட்ட பொதுச்சொத்துக்களை 2011ல் ஆவண எண் 906/2011ன்படி பிரித்துக்கொண்டோம் என்றால் சரியல்ல, அனைத்துச்சொத்துக்களையும் பிரிக்கவில்லை.

9. எனது குடும்பச்சொத்துக்கள் அனைத்தும் பிரிக்கப்பட்டு விட்டன என்றாலும் வழக்கிற்காக பொய்யாக மறுத்துச்சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி சரியாகதான் கிரையம் வாங்கியுள்ளார் என்றாலும் பொய்யாக அதை மறுத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. C Schedule சொத்து அருகே உள்ள B Schedule சொத்தை நான் ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. அசல் வழக்கு எண் 526/1996ப் பற்றி எனக்குத்தெரியும். மேற்படி வழக்கில் தீர்ப்பின்படி எங்கள் குடும்பச்சொத்துக்களை 3 பங்காக பிரித்துள்ளார்கள் என்றாலும் அதில் C Schedule சொத்தையும் திருமலை என்பவருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. மேற்படி தீர்ப்பின்படி வழக்குச்சொத்து C Schedule சொத்தாக 1ம் பிரதிவாதியின் கணவர் திருமலைக்கு ஒதுக்கப்பட்டு அந்தச்சொத்து 2ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

2. வழக்குச்சொத்திற்கான பட்டா எண் 2015 கூட்டாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி பட்டாபடியும் மேற்படி தீர்ப்பின்படியும் C Schedule சொத்து 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு 2ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 3 முதல் 6 பிரதிவாதிகளுக்கு எதிராக கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/- M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.